[20th November 1963

*321 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of bus-stands constructed by the State Transport Department in mufassal with the names of places where such bus-stands have been and are being constructed; and

(b) the estimated cost for each bus-stand?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) and (b).

Bus Stands already constructed or under construction.

	Cost.
	RS.
(1) Tiruchirappalli (completed)	1,00,000
(2) Coimbatore (in progress)	1,22,800
(3) Krishnagiri (in progress)	90,000
(4) Vellore (nearing completion)	58,000

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: கவர்மெண்டு டிரான்ஸ்போர்ட் பஸ் ஸ்டாண்டு கட்டுவதனுல், அதை லோகல்பாடி பராமரிக்க வேண்டியிருக்குமாதலால் அதற்காக ஏதேனும் தனியாக பணம் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்கிறேன்.

திரு. வை. சங்கரன்: நீண்டதூரம் பஸ் ரூட்டுகளை சர்க்கார் ஏற்றுக்கொண்டு நடத்தி வருகிறபோது—மதுரை அந்த ரூட்டுகளின் நடுவில் ஒரு பெரிய ஜங்ஷனுக இருக்கிறது. ஆகவே திருச்சி போல மதுரையிலும் தனியாக ஒரு சர்க்கார் பஸ் நிலையம் அமைக்க சர்க்கார் முடிவு எடுக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மதுரையில் பஸ் நிலையம் கட்ட இரண்டு லட்சம் சாங்ஷனுகி அந்த வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர்: உதகமண்டலத்தில் பஸ்களை நிறுத்த அங்கே ஒரு பஸ் ஸ்டாண்டு கட்ட உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, ஒவ்வொரு இடமாக எந்த எந்த இடத்தில் பஸ் ஸ்டாண்டு கட்டப்படும் என்று கேட்டு பதிலளிப்பதற்குப் பதிலாக, எந்த எந்த இடங்களில் கட்டும் உத்தேசம் இருக்கிறது என்று ஒரேயடியாகச் சொல்லிவிடுகிறேன். சேலம், ஈரோடு, ராமநாதபுரம் மதுரை, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் கட்டுவதாக உத்தேசம்.